தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை– 600 035. தொலைபேசி எண். 044-29515590

விசாரணை நாள் 05.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் SA 13695-E-2024

திரு ரா.வேங்கடபதி - மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அமைந்தகரை வட்டம்.
சென்னை - 600 032 - பொது அதிகார அமைப்பு

******

இறுதி ஆணை

இவ்வாணையத்தின் 20.08.2026 நாளிட்ட ஆணையின் பத்தி 3-ல், இவ்வாணையம்:-

"மேலும், பொதுத் தகவல் அலுவலர் / அமைந்தகரை வட்ட சார் ஆய்வாளர் திரு ம.ராஜேஷ்கன்னா இவ்வாணையத்தில் 20.08.2026 அன்று ஆஜராகி, ஆணையத்தில் 27.07.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகாதது குறித்த தனது விளக்கத்தை சமர்ப்பித்தார். அவ்விளக்கத்தில், 27.07.2026 அன்று நடைபெற்ற விசாரணை தொடர்பான விசாரணை அறிவிப்பு கடிதம் தனது இருக்கைக்கு 13.08.2026 அன்று தான் கிடைக்கப்பெற்றது என்றும், ஆகவேதான் தன்னால் அன்றைய தினம் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இந்த விளக்கத்தை ஆணையம் ஏற்கிறது. எனினும், தகவல் ஆணையத்திலிருந்து 08.07.2026 அன்று அனுப்பப்பட்ட விசாரணை அறிவிப்பு கடிதம் குறித்த விவரத்தை, பொதுத் தகவல் அலுவலரின் கவனத்திற்கு உரிய காலத்தில் கொண்டு வர தவறிய அலுவலர் யார் என்பதை கண்டறிந்து அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தை பெற்று, இவ்வாணையத்தில் 21.09.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் அமைந்தகரை வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது" என கூறப்பட்டிருந்தது.

2) மேற்படி உத்தரவையடுத்து, அமைந்தகரை வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி எஸ்.சாரதா இவ்வாணையத்தில் 23.09.2026 அன்று ஆஜராகி, ஆணையத்தின் மேற்படி உத்தரவை நிறைவேற்ற கால அவகாசம் வேண்டுமென ஆணையத்தை கேட்டுக் கொண்டார்.

3) அதன் பின்னர், அமைந்தகரை வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி எஸ்.சாரதா 22,10.2026 அன்று இவ்வாணையத்திற்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில், ஆணையத்தின் விசாரணை அறிவிப்புக் கடிதத்தை அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு தாமதமாக வழங்கிய அமைந்தகரை வட்டாட்சியர் அலுவலக இளநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி பத்மாவதிக்கு 22.09.2026 அன்று விளக்கம் கோரும் குறிப்பாணை அனுப்பப்பட்டது என்றும், அதற்கு அவர் அளித்துள்ள தனது எழுத்து மூலமான விளக்கத்தில், தனது மகனுக்கு இருதயத்தில் ஆஞ்சியோ செய்யப்பட்டு, மகனுடன் அடிக்கடி மருத்துவமனைக்கு சென்று வந்ததால், மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகியதால், ஆணையத்திலிருந்து வந்த கடிதத்தை உரிய அலுவலரிடம் தருவதற்கு தாமதமாகி விட்டது என்று விளக்கம் அளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டு, மேற்படி திருமதி பத்மாவதி அளித்துள்ள விளக்கத்தின் நகல் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த விளக்கத்தின் அடிப்படையில் திருமதி பத்மாவதி இனிவரும் காங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறா வண்ணம் அரசு பணியின் முக்கியத்துவம் உணர்ந்து, கவனமுடன் பணிபுரியுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) இவ்வாணையத்தின் 20.08.2026 நாளிட்ட உத்தரவு நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில், இந்த மேல்முறையீட்டு மனுவை மேல் நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

ஒம்/- (அபய் குமார் சிங்)
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண் SA 13695-E-2024

பெறுநர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
அமைந்தகரை வட்டம், வட்டாட்சியர் அலுவலகம்,
சென்னை - 600 032

திரு ரா.வேங்கடபதி,
மனை எண்.177, கதவு எண்.266,
வ.வு.சி தெரு,
தில்லையாடி வள்ளியம்மை நகர்,
திருமங்கலம், அண்ணா நகர் மேற்கு,
சென்னை - 600 040

Copy to file
CR/PA